Karur Vysya Bank
Smart way to bank

மிக முக்கியமான விதிமுறைகள் & நிபந்தனைகள்

KVB கிரெடிட் கார்டுகள்

A. கட்டணங்கள் மற்றும் வசூலிக்கப்படும் தொகைகள்:

1. சேரும் கட்டணம், வருடாந்திர கட்டணம் மற்றும் ஆட் ஆன் கார்டு கட்டணம்:

கார்டு வகைப்பாடு		சேரும் கட்டணம்	வருடாந்திர கட்டணம்	வருடாந்திர கட்டணத்திற்கான விலக்கு நிபந்தனை	இரண்டாம் ஆண்டு மற்றும் அதற்குப் பிறகு வருடாந்திர கட்டணங்களுக்கான விலக்கு நிபந்தனை	சேரும் கட்டணம் - ஆட் ஆன் கார்டு
ரீடெயில்	Visa Platinum	இல்லை	Rs.599/-	முதல் வருடத்திற்கு தள்ளுபடி செய்யப்பட்டது	முந்தைய ஆண்டில் ரொக்கம் எடுத்தல் தவிர குறைந்தபட்ச சில்லறை செலவுகள் ₹1.00 லட்சம்	ரூ.200/-
	Visa Signature	இல்லை	Rs.999/-		முந்தைய ஆண்டில் ரொக்கம் எடுத்தல் தவிர குறைந்தபட்ச சில்லறை செலவுகள் ₹3.00 லட்சம்	ரூ.200/-
கார்ப்பொரேட்	Visa Platinum	இல்லை	Rs.1000/-		பொருந்தாது	ரூ.200/-

குறிப்பு: மேலே உள்ளவை ஒவ்வொரு கார்டு வகைக்கும் பொருந்தக்கூடிய நிலையான கட்டணங்கள் ஆகும். அவ்வப்போது குறிப்பிட்ட விளம்பரத் திட்டங்களின் கீழ் கார்டுகள் வழங்கப்படும்போதும் இது மாறுபடலாம்.

2. நிதிக் கட்டணங்கள்:

கார்டு வகைப்பாடு		நீட்டிக்கப்பட்ட கடனுக்கான நிலுவையில் உள்ள வட்டி		ரொக்க முன்பணத்தின் மீதான வட்டி	
		மாதாந்திர விகிதம்	வருடாந்திர விகிதம்	மாதாந்திர விகிதம்	வருடாந்திர விகிதம்
ரீடெயில்	Visa Platinum	3.25%	39.00%	3.25%	39.00%
	Visa Signature				
கார்ப்பொரேட்	Visa Platinum	2.95%	35.40%	2.95%	35.40%
வட்டி இல்லாத சலுகைக் காலம்		15-45 நாட்கள் (சில்லறை கொள்முதல்களுக்கு மற்றும் முந்தைய மாத நிலுவைத் தொகை முழுமையாக செலுத்தப்பட்டிருந்தால் மட்டுமே பொருந்தும்)			

3. இதர கட்டணங்கள் மற்றும் வசூலிக்கப்படும் தொகைகள்:

	ரீடெயில் கிரெடிட் கார்டு	கார்ப்பொரேட் கிரெடிட் கார்டு
ரொக்க முன்பணம் வரம்பு	கடன் வரம்பில் 10%	
EMI/BT செயலாக்கக் கட்டணம்	ரூ.300 அல்லது கடன் தொகையில் 1%, எது அதிகமோ அது	பொருந்தாது

MITC-யின் சமீபத்திய பதிப்பையும், வங்கியின் அட்டைதாரர் (கார்டுஹோல்டர்) ஒப்பந்தத்தையும் பெற, தயவுசெய்து பார்வையிடவும் www.kvb.co.in

	ரீடெயில் கிரெடிட் கார்டு	கார்ப்பொரேட் கிரெடிட் கார்டு
EMI/BT முன்கூட்டியே அடைத்தல் கட்டணம்	நிலுவையில் உள்ள அசல் தொகையில் 3%	பொருந்தாது
பணம் எடுப்பதற்கான கட்டணங்கள்	ஒரு பரிவர்த்தனைக்கு ரூ. 300/- அல்லது பரிவர்த்தனைதொகையில் 1%, எது அதிகமோ அது	ரூ. 100/- அல்லது எடுக்கப்பட்ட ரொக்கத்தில் 2%, இதில் எது அதிகமோ அது

தாமதமாகச் செலுத்துவதற்கான கட்டணங்கள்		
நிலுவையில் உள்ள மொத்த தொகை	**ரீடெயில் கிரெடிட் கார்டு**	**கார்ப்பொரேட் கிரெடிட் கார்டு**
200க்கும் குறைவாக	இல்லை	ரூ. 500/-
200-500	ரூ. 100/-	
501-2500	ரூ. 300/-	
2501-10000	ரூ. 500/-	
10001 -25000	ரூ. 800/-	
25001 மற்றும் அதற்கு மேல்	ரூ. 1000/-	

வரம்பை தாண்டிய (ஓவர் லிமிட்) கட்டணங்கள்	குறைந்தபட்சம் ரூ.500/-க்கு உட்பட்டு, வரம்புக்கு மேல் உள்ள தொகைக்கு 2.5%.	ரூ. 500/-
கட்டணம் திரும்பிவிடுதல் (பேமண்ட் ரிட்டர்ன்ஸ்) கட்டணங்கள்	குறைந்தபட்சம் ரூ.450/-க்கு உட்பட்ட மொத்த நிலுவைத் தொகையில் 2%	ரூ. 500/-
கிளைகளில் ரொக்கமாக செலுத்துவதற்கான கட்டணம்	ரூ. 100/-	
(குறைந்தபட்ச நிலுவைத் தொகை) (MAD)	மொத்த நிலுவைத் தொகையில் 5% (குறைந்தபட்சம் ரூ.200/-) + பொருந்தக்கூடிய அனைத்து வரிகளும் + EMI(EMI அடிப்படையிலான தயாரிப்பாக இருந்தால்) + OVL தொகை(ஏதேனும் இருந்தால்). இது அறிக்கையில் குறைந்தபட்ச நிலுவைத் தொகையா Minimum Amount Due (குறைந்தபட்ச நிலுவைத் தொகை) காட்டப்படும்.	மொத்த நிலுவைத் தொகையில் 5% (குறைந்தபட்சம் ரூ.100/-) + பொருந்தக்கூடிய அனைத்து வரிகளும் + EMI(EMI அடிப்படையிலான தயாரிப்பாக இருந்தால்) + OVL தொகை (ஏதேனும் இருந்தால்). இது அறிக்கையில் குறைந்தபட்ச நிலுவைத் தொகையா Minimum Amount Due (குறைந்தபட்ச நிலுவைத் தொகை) காட்டப்படும்.
வாடகைக் கட்டணங்கள்	வாடகை செலுத்துதலுக்கு 1% சேவை கட்டணம்	
பணம் செலுத்த வேண்டிய தேதிகள்	ஒவ்வொரு மாதமும் 5, 10, 15, 20 மற்றும் 25 ஆம் தேதிகளில்	ஒவ்வொரு மாதமும் 20 ஆம் தேதி
பில்லிங் தேதி	பணம் செலுத்த வேண்டிய தேதிக்கு 15 நாட்களுக்கு முன்பு	

கார்டு மாற்றுக் கட்டணம் (தொலைந்து போன, திருடப்பட்ட அல்லது சேதமடைந்த கார்டுகள்)	ரூ. 199/-	ரூ. 500/-
கார்டு மாற்றுக் கட்டணம் (மோசடியான பரிவர்த்தனை, காலாவதியானவுடன் மீண்டும் வழங்கப்படுவது	தள்ளுபடி செய்யப்பட்டது	
வெளிநாட்டு பரிவர்த்தன கட்டணங்கள்	3.5% மார்க்அப் கட்டணம்^^	
வெளியூர் காசோலை கட்டணம்	தள்ளுபடி செய்யப்பட்டது	
ரயில்வே முன்பதிவு/ ரத்து செய்தல் - கூடுதல் கட்டணம்	IRCTC / இந்திய இரயில்வே பரிந்துரைத்தபடி	
எரிபொருள் கூடுதல் கட்டணம் தள்ளுபடி	பில்லிங் சுழற்சிக்கு அதிகபட்சமாக ரூ.200/- பரிவர்த்தனை மதிப்பில் 1% (ஒரே பரிவர்த்தனையில் ரூ.500 முதல் ரூ.4,000/- வரை செலவழிக்கப்படுவதற்கு)	பில்லிங் சுழற்சிக்கு அதிகபட்சமாக ரூ.300/- பரிவர்த்தனை மதிப்பில் 2% (ஒரே பரிவர்த்தனையில் ரூ.400 முதல் ரூ.4,000/- வரை செலவழிக்கப்படுவதற்கு)
வெகுமதி மீட்புக் கட்டணம்	ஒரு மீட்பு கோரிக்கைக்கு ரூ.99/- (முதல் மீட்புக்கு குறைந்தபட்சம் 2000 வெகுமதி புள்ளிகள் தேவை, அடுத்தடுத்த மீட்புகளுக்கு குறைந்தபட்சம் 800 வெகுமதி புள்ளிகள் தேவை), கோரப்படாத வெகுமதி புள்ளிகள் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது குறைந்தபட்ச நிலுவைத் தொகை 60 நாட்களுக்கு மேல் செலுத்தப்படாவிட்டால் காலாவதியாகிவிடும்.	
பரிவர்த்தனைகளுக்கான மொபைல்/மின்னஞ்சல் விழிப்பூட்டல் கட்டணங்கள்	தள்ளுபடி செய்யப்பட்டது	
கார்டு ஹாட் லிஸ்டிங் கட்டணங்கள்	தள்ளுபடி செய்யப்பட்டது	
நேரடி அறிக்கை கட்டணங்கள்	பொருந்தாது	
சரக்கு மற்றும் சேவை வரி	அனைத்து வகையான கட்டணங்களுக்கும், வசூலிக்கப்படும் தொகைகளுக்கும் பொருந்தும்	

^^ இந்திய ரூபாய் அல்லாத வேறு நாணயத்தில் பரிவர்த்தனை செய்யப்பட்டால், அந்த பரிவர்த்தனை இந்திய ரூபாயாக மாற்றப்படும். கரூர் வைஸ்யா வங்கி லிமிடெட் நிறுவனத்துடன் பரிவர்த்தனை தீர்வு செய்யப்படும் தேதியில் மாற்றம் நடைபெறும், இந்தத் தீர்வு தேதியானது பரிவர்த்தனை செய்யப்பட்ட அதே தேதியாக இருக்காது. பரிவர்த்தனையானது அமெரிக்க டாலர்களில் இல்லையென்றால், கட்டணம் வசூலிக்கப்பட்ட தொகையை அமெரிக்க டாலர்களாக மாற்றுவதன் மூலமும், பின்னர் அமெரிக்க டாலர் தொகையை இந்திய ரூபாயாக மாற்றுவதன் மூலமும் மாற்றம் அமெரிக்க டாலர்கள் மூலம் செய்யப்படும்.

பொருந்தக்கூடிய சட்டத்தின்படி ஒரு குறிப்பிட்ட விகிதம் தேவைப்படவில்லை என்னும்பட்சத்தில், அமெரிக்க டாலரிலிருந்து இந்திய ரூபாய்க்கு மாற்றும் விகிதம், தீர்வு செய்யப்படும் தேதியில், VISA,

MasterCard அல்லது AMEX வழங்கும் விகிதங்களில் இருக்கும், அத்தகைய பரிவர்த்தனைகளில் நாணய மாற்ற காரணி மதிப்பீட்டால் (தற்போது 3.50%) அதிகரிக்கப்படும்.

வாடிக்கையாளருக்கு குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்னதாகவே உரிய அறிவிப்பு வழங்கப்பெற்று, எந்தவொரு கட்டணங்களையும் அல்லது வசூலிக்கப்படும் தொகைகளையும் அவ்வப்போது மாற்றவோ அல்லது எந்தவொரு புதிய கட்டணங்கள் அல்லது வசூலிக்கப்படும் தொகைகளை, அது பொருத்தமானதாகக் கருதப்படும் வகையில் அறிமுகப்படுத்தவோ வங்கிக்கு உரிமை உண்டு.

4. வட்டி இல்லா காலம்:

பில்லிங் சுழற்சி தேதியின் தொடக்கத்திலிருந்து வட்டி இல்லாத காலம் 45 நாட்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். உங்கள் கார்டில் பணம் செலுத்த வேண்டிய தேதி, அறிக்கை தேதிக்குப் பிறகு 15 நாட்களுக்குள் இருக்கலாம் (உங்கள் சரியான பணம் செலுத்த வேண்டிய தேதிக்கு உங்கள் அறிக்கையைச் சரிபார்க்கவும்). எனவே இலவச கடன் காலமானது 15-45 நாட்கள் வரை இருக்கலாம். வட்டி இல்லா காலக் கணக்கீட்டிற்கான விளக்க உதாரணம்: பிப்ரவரி 11 முதல் மார்ச் 10 வரையில் உள்ள காலகட்டத்திற்கான அறிக்கைக்கு பணம் செலுத்த வேண்டிய தேதி மார்ச் 25 ஆகும். உங்கள் முந்தைய மாத நிலுவைத் தொகையை நீங்கள் முழுமையாக செலுத்திவிட்டீர்கள் என்று வைத்துக் கொண்டால், வட்டி இல்லாத காலமானது: பிப்ரவரி 12 ஆம் தேதியிட்ட கொள்முதலுக்கு, வட்டி இல்லாத காலம் பிப்ரவரி 12 முதல் மார்ச் 25 வரை, அதாவது 42 நாட்கள் ஆகும். மார்ச் 2 ஆம் தேதி நடைபெறும் எந்தவொரு கொள்முதலுக்கும், வட்டி இல்லாத காலம் மார்ச் 2 முதல் மார்ச் 25 வரை = 24 நாட்கள் ஆகும்.

இதனால், வட்டி இல்லாத காலம் கொள்முதல் செய்யும் தேதியைப் பொறுத்து மாறுபடும். இருப்பினும், பணம் செலுத்த வேண்டிய தேதிக்குள் மொத்த நிலுவைத் தொகை செலுத்தப்படாவிட்டால், வட்டி இல்லாத காலம் இருக்காது. ரொக்க முன்பணங்களுக்கு, பரிவர்த்தனை செய்த தேதியிலிருந்து பணம் செலுத்தும் தேதி வரை வட்டி வசூலிக்கப்படும்.

5. நிதிக் கட்டணங்கள்:

நீங்கள் முந்தைய பில் தொகையை செலுத்தவேண்டிய தேதி அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ முழுமையாக செலுத்தவில்லை என்றால், தினசரி திரட்டப்படுவதன் அடிப்படையில் வட்டி உங்களிடம் வசூலிக்கப்படும். பரிவர்த்தனை செய்யப்படும் தேதியிலிருந்து தீர்வு செய்யப்படும் தேதி வரை வட்டி வசூலிக்கப்படும். பரிவர்த்தனை செய்யப்படும் தேதியிலிருந்து தீர்வு செய்யப்படும் தேதி வரை ரொக்க முன்பணத்திற்கான வட்டி வசூலிக்கப்படும். முழுப் பணமும் செலுத்தவேண்டிய தேதிக்குப் பிறகு ஆனால் அடுத்த அறிக்கை தேதிக்கு முன் பெறப்பட்டால், அப்போதும் வட்டி வசூலிக்கப்படும். நீங்கள் பகுதியளவு பணம் செலுத்தி வந்திருந்தாலும், பணம் செலுத்த வேண்டிய தேதியில் அல்லது அதற்கு முன் தற்போதைய அறிக்கையின் நிலுவைத் தொகையை முழுமையாக செலுத்தியிருந்தால், முழு பணம் செலுத்தும் தேதி வரை தற்போதைய அறிக்கையின் மொத்த நிலுவைத் தொகையின் மீது வட்டி வசூலிக்கப்படும். அவ்வாறு வசூலிக்கப்படும் வட்டியானது, அடுத்தடுத்த அறிக்கையில் பிரதிபலிக்கும்.

உதாரணத்திற்கு: பணம் செலுத்த வேண்டிய கடைசி தேதி பிப்ரவரி 25 மற்றும் செலுத்த வேண்டிய மொத்த மீதத் தொகை ரூ.5,000/-. மார்ச் 10 ஆம் தேதி ரூ.5,000/- செலுத்தப்பட்டது. குறிப்பிட்ட நாட்களுக்கான ரூ.5,000/-க்கான வட்டி, அடுத்த அறிக்கையில் பில் செய்யப்படும்.

வட்டி கணக்கீட்டின் விளக்கம்:

வட்டி கட்டணங்களைக் கணக்கிடும் முறையை பின்வரும் விளக்கம் குறிக்கும்:

கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில், முந்தைய மாத அறிக்கையின் மொத்த நிலுவைத் தொகை, பணம் செலுத்த வேண்டிய தேதிக்குள் செலுத்தப்பட்டதாகவும், நிலுவைத் தொகை எதுவும் இல்லை என்றும் கருதப்படுகிறது. அறிக்கை தேதி ஒவ்வொரு மாதமும் 10 ஆம் தேதி ஆகும். இந்த அனுமானங்களைக் கொண்டு, வட்டியானது பின்வருமாறு கணக்கிடப்படும்:

விளக்கம் 1 – ரீடெயில் கிரெடிட் கார்டுகளுக்கு

தினசரி வட்டி விகிதம் = (3.25%) *12/365 = 0.1068%	
5 அக்டோபர் 2019 அன்று கொள்முதல் செய்யப்பட்டது	ரூ. 2,000/-
அக்டோபர் 10, 2019 தேதியிட்ட அறிக்கைக்கான மொத்த நிலுவைத் தொகை	ரூ. 2,000/-
அக்டோபர் 10, 2019 தேதியிட்ட அறிக்கையில் நிலுவையில் உள்ள குறைந்தபட்ச தொகை	ரூ. 200/-
பணம் செலுத்த வேண்டிய தேதி 25 அக்டோபர் 2019	
20 அக்டோபர் 2019 அன்று கொள்முதல் செய்யப்பட்டது.	ரூ. 1,000/-
நவம்பர் 4, 2019 அன்று பணம் செலுத்தப்பட்டது	ரூ. 1,000/-
நவம்பர் 10, 2019 தேதியிட்ட அறிக்கையில், பின்வரும் வட்டி கட்டணங்கள் விதிக்கப்படும்	
a) 30 நாட்களுக்கு ரூ.2,000/- மீதான வட்டி (அக்டோபர் 5 முதல் நவம்பர் 3 வரை)	64.10
b) 7 நாட்களுக்கு ரூ.1,000/- மீதான வட்டி (நவம்பர் 4 முதல் நவம்பர் 10 வரை)	7.48
c) 22 நாட்களுக்கு ரூ.1,000/- மீதான வட்டி (அக்டோபர் 20 முதல் நவம்பர் 10 வரை	23.5
நவம்பர் 10 தேதியிட்ட அறிக்கையில் விதிக்கப்பட்ட மொத்த வட்டி	95.08

விளக்கம் 2 - கார்ப்பொரேட் கிரெடிட் கார்டுகளுக்கு

தினசரி வட்டி விகிதம் = (2.95%)*12/365 = 0.09698%	
5 அக்டோபர் 2019 அன்று கொள்முதல் செய்யப்பட்டது	ரூ. 2,000/-
அக்டோபர் 10, 2019 தேதியிட்ட அறிக்கைக்கான மொத்த நிலுவைத் தொகை	ரூ. 2,000/-
அக்டோபர் 10, 2019 தேதியிட்ட அறிக்கையில் நிலுவையில் உள்ள குறைந்தபட்ச தொகை	ரூ. 1,00/-
பணம் செலுத்த வேண்டிய தேதி 25 அக்டோபர் 2019	
20 அக்டோபர் 2019 அன்று கொள்முதல் செய்யப்பட்டது.	ரூ. 1,000/-
நவம்பர் 4, 2019 அன்று பணம் செலுத்தப்பட்டது	ரூ. 1,000/-
நவம்பர் 10, 2019 தேதியிட்ட அறிக்கையில், பின்வரும் வட்டி கட்டணங்கள் விதிக்கப்படும்.	
a) 30 நாட்களுக்கு ரூ.2,000/- மீதான வட்டி (அக்டோபர் 5 முதல் நவம்பர் 3 வரை)	58.19
b) 7 நாட்களுக்கு ரூ.1,000/- மீதான வட்டி (நவம்பர் 4 முதல் நவம்பர் 10 வரை)	7.48
c) 22 நாட்களுக்கு ரூ.1,000/- மீதான வட்டி (அக்டோபர் 20 முதல் நவம்பர் 10 வரை)	21.33
நவம்பர் 10 தேதியிட்ட அறிக்கையில் விதிக்கப்பட்ட மொத்த வட்டி	87.00

ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்ச கட்டணத்தை மட்டும் செலுத்துவதனால், உங்கள் நிலுவைத் தொகையின் மீதான வட்டி செலுத்துதலுடன், திருப்பிச் செலுத்தல் என்பது பல வருடங்களுக்கு இழுக்கும்.

Late Payment Charges (தாமதமாகச் செலுத்துவதற்கான கட்டணங்கள்) (LPC):
பணம் செலுத்த வேண்டிய தேதிக்குள் குறைந்தபட்ச நிலுவைத் தொகையானது

செலுத்தப்படாவிட்டால், Late Payment Charges (தாமதமாகச் செலுத்துவதற்கான கட்டணங்கள்) பொருந்தும்.

Late Payment Charges (தாமதமாகச் செலுத்துவதற்கான கட்டணங்கள்) கணக்கிடுவதற்கான விளக்க உதாரணம்:

தாமதமாக பணம் செலுத்துவதற்கான கட்டணங்கள் எதுவும் விதிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய, பணம் செலுத்த வேண்டிய தேதி (அக்டோபர் 25), கருணை தேதி (அக்டோபர் 28 வரை) க்குள், குறைந்தது மேலே உள்ள எடுத்துக்காட்டில் குறைந்தபட்ச நிலுவைத் தொகையான, அதாவது, ரூ.200/-ஐ செலுத்த வேண்டும். குறைந்தபட்ச நிலுவைத் தொகை அல்லது குறைந்தபட்சம் ரூ.200/- செலுத்தப்படாவிட்டால், கீழே உள்ள அட்டவணையின்படி தாமதமாக பணம் செலுத்துவதற்கான கட்டணங்கள் விதிக்கப்படும்.

Late Payment Charges (தாமதமாகச் செலுத்துவதற்கான கட்டணங்கள்)		
Total Amount Due	**ரீடெயில் கிரெடிட் கார்டு**	**கார்ப்பொரேட் கிரெடிட் கார்டு**
200 க்கும் குறைவாக	இல்லை	ரூ. 500/-
200-500	ரூ. 100/-	
501-2500	ரூ. 300/-	
2501-10000	ரூ. 500/-	
10001 -25000	ரூ. 800/-	
25001 மற்றும் அதற்கு மேல்	ரூ. 1000/-	

எனவே, பணம் செலுத்த வேண்டிய தேதிக்குள் நீங்கள் செலுத்த வேண்டிய குறைந்தபட்ச தொகையை விடக் குறைவாகவோ அல்லது குறைந்தபட்சம் ரூ. 200 ஐ விடக் குறைவாகவோ செலுத்தினால் இந்தக் கட்டணமும் பொருந்தும். Late Payment Charges (தாமதமாகச் செலுத்துவதற்கான கட்டணங்கள்) GST பொருந்தும்.

வரம்பை தாண்டிய (ஓவர் லிமிட்) கட்டணங்கள்:

ஒரு சேவை நடவடிக்கையாக வங்கியானது, கடன் வரம்பை மீறக்கூடியவகையில் அட்டைதாரர் கடன் வரம்பை மீறும் சில பரிவர்த்தனைகளை அங்கீகரிக்கலாம், ரீடெயில் மற்றும் கார்ப்பரேட் கிரெடிட் கார்டுகளுக்கு வரம்பு மீறல் தொகையில் 2.50% (குறைந்தபட்சம் ரூ. 500 க்கு உட்பட்டது) வரம்பு மீறல் கட்டணம் விதிக்கப்படும். கட்டணங்கள் அல்லது வட்டி கட்டணங்கள் காரணமாக வரம்பு மீறல் நிலை ஏற்படலாம்.

பணம் எடுப்பதற்கான கட்டணம்:

அட்டைதாரர், கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் கிரெடிட் கார்டைப் பயன்படுத்தி இந்தியாவிலோ அல்லது வெளிநாடுகளிலோ உள்ள ATMகளில் இருந்து பணத்தை எடுக்க, கிரெடிட் கார்டு விண்ணப்பிக்கும் போது தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்களின் பயன்பாட்டு விருப்பத்தைப் பொறுத்து, அத்தகைய ATM (களில்) உள்ள கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் கிரெடிட் கார்டின் இணக்கத்தன்மைக்கு ஏற்ப, பயன்படுத்தலாம். இதுபோன்ற பணம் எடுத்தல் அனைத்துக்கும் பரிவர்த்தனை கட்டணம் விதிக்கப்படும், மேலும் அடுத்த அறிக்கையில் அட்டைதாரருக்கு பில் செய்யப்படும்.

ரீடெயில் கிரெடிட் கார்டுக்கு EMI / BT இருப்பை மாற்றுதல்:

EMI / BT கடன் தொகையானது, equated monthly installment (சமமான மாதாந்திர தவணையாக) (EMI) ஆக மாற்றப்பட்டு, வழக்கமான கிரெடிட் கார்டு அறிக்கையில் ஒவ்வொரு மாதமும் வாடிக்கையாளருக்கு பில் செய்யப்படும். வாடிக்கையாளர் கடமை தவறுதல் நிலைக்கு மாறுவதைத் தவிர்க்க, வாடிக்கையாளர் பில் செய்யப்பட்ட EMI தொகையில் 100% ஐ திருப்பிச் செலுத்த வேண்டும். வாடிக்கையாளர் 60 நாட்களுக்கு மேல் EMI தொகையை திருப்பிச் செலுத்தத் தவறினால், மீதமுள்ள EMI / BT அசல் நிலுவைத் தொகையானது, சில்லறை நிலுவைத் தொகைக்கு மாற்றப்பட்டு, கடன் தானாகவே முன்கூட்டியே அடைக்கப்படும். அதன் பிறகு மீதமுள்ள நிலுவைத் தொகைக்கு சில்லறை திட்டத்தின் கட்டணங்கள் மற்றும் வசூலிக்கப்படும் தொகைகள் பொருந்தும்.

B. பணம் எடுப்பதற்கான வரம்புகள்:

1. கிரெடிட் வரம்பு:

இது அட்டைதாரருக்கு ஒதுக்கப்பட்ட வரம்பாகும். அனைத்து பரிவர்த்தனைகள், கட்டணங்கள் மற்றும் வசூலிக்கப்படும் தொகைகள் உட்பட மொத்த நிலுவைத் தொகை இந்த வரம்பை விட அதிகமாக இருக்கக்கூடாது.

கார்ப்பரேட்டைப் பொறுத்தவரை, தனிப்பட்ட கார்ப்பரேட் கிரெடிட் கார்டு வைத்திருப்பவர்களிடையே கடன் வரம்பானது பகிரப்படும், இதை கார்டுதாரர்களிடையே கார்ப்பரேட் ஆனது ஒதுக்கலாம். அட்டைதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட தனிப்பட்ட கடன் வரம்பின் மொத்த அளவு, கார்ப்பரேட்டுக்கு ஒதுக்கப்பட்ட கடன் வரம்பை விட அதிகமாக இருக்கக்கூடாது என்பதை நிறுவனம் உறுதி செய்கிறது.

2. ரொக்க வரம்பு:

ரொக்க வரம்பு என்பது கடன் வரம்பின் துணைக்குழுவாக இருக்கும். கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் தனது சொந்த விருப்பப்படியும், அவ்வப்போது கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் தெரிவிக்கக்கூடிய விதிமுறைகளின் அடிப்படையிலும் கார்டு உறுப்பினருக்கு ரொக்க வரம்பு கிடைக்கும்படி செய்யப்படும்.

3. கிடைக்கும் கிரெடிட் வரம்பு:

எந்த நேரத்திலும், கிடைக்கக்கூடிய கடன் வரம்பு என்பது ஒதுக்கப்பட்ட கடன் வரம்புக்கும் அந்த நேரத்தில் கார்டில் நிலுவையில் உள்ள தொகைக்கும் உள்ள வித்தியாசமாகும். முதன்மை அட்டைதாரருக்கு ஒதுக்கப்பட்ட இந்த கடன் வரம்பை கூடுதல் அட்டைதாரர்(கள்) பகிர்ந்து கொள்வார்கள்.

4. கிடைக்கும் ரொக்க வரம்பு:

எந்த நேரத்திலும், கிடைக்கக்கூடிய ரொக்க வரம்பு என்பது, ஒதுக்கப்பட்ட ரொக்க வரம்புக்கும் அந்த நேரத்தில் கார்டில் நிலுவையில் உள்ள ரொக்க இருப்புக்கும் உள்ள வித்தியாசமாகும்.

5. சர்வதேச வரம்பு:

சர்வதேச வரம்பு என்பது வாடிக்கையாளருக்கு சர்வதேச பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட வரம்பாகும். சர்வதேச பரிவர்த்தனைகளை இயக்க/முடக்க அல்லது சர்வதேச பரிவர்த்தனைகளுக்கான கடன் வரம்பை அதிகரிக்க/குறைக்க விரும்பினால், அதற்காக நீங்கள் வங்கியின் வாடிக்கையாளர் தொடர்பு மையம்/மொபைல் வங்கிச்சேவையைத் தொடர்பு கொள்ளலாம்.

கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் அதன் சொந்த விருப்பப்படி கார்டு உறுப்பினரின் கடன் வரம்பு மற்றும் பணம் எடுக்கும் வரம்பை தீர்மானிக்கும் (கூடுதல் கார்டு உறுப்பினர்கள்) முதன்மை கார்டு உறுப்பினரின் அதே வரம்பை பகிர்ந்து கொள்கிறார்கள்). கடன் வரம்பு என்பது எந்த நேரத்திலும் கிரெடிட் கார்டு கணக்கில் நிலுவையில் இருக்கக்கூடிய அதிகபட்ச தொகையாகும். இந்த வரம்புகள் கார்டு டெலிவரி செய்யும் நேரத்திலும், மாதாந்திர அறிக்கைகள் மூலமாகவும் கார்டு உறுப்பினருக்கு முறையாகத் தெரிவிக்கப்படும். அறிக்கை உருவாக்கும் நேரத்தில் கிடைக்கக்கூடிய கடன் வரம்பும், மாதாந்திர அறிக்கையின் ஒரு பகுதியாக வழங்கப்படுகிறது. கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் வரையறுத்துள்ள அல்லது பரிந்துரைக்கப்பட்டபடி, கார்டு உறுப்பினர் தனது கிரெடிட் கார்டு கணக்கில் பயன்படுத்தக்கூடிய அதிகபட்ச ரொக்கத் தொகை அல்லது அதற்கு சமமான தொகையே ரொக்க முன்பண வரம்பு ஆகும். ரொக்க வரம்பு என்பது கார்டு உறுப்பினரின் கடன் வரம்பின் ஒரு பகுதியாகும். பொருந்தக்கூடிய ரொக்க முன்பண வரம்பை தெரிந்துகொள்ள தயவுசெய்து கட்டணத்திற்கான அட்டவணையைப் பார்க்கவும்.

கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட், கார்டு உறுப்பினரின் கிரெடிட் கார்டு கணக்கை அவ்வப்போது மதிப்பாய்வு செய்யும். கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட், அதன் சொந்த விருப்பத்தின் பேரில், உள் அளவுகோல்களின் அடிப்படையில் கார்டு உறுப்பினரின் கடன் வரம்பைக் குறைக்கலாம். வங்கி

உடனடியாக கார்டு உறுப்பினருக்கு அதற்கான காரணத்தை SMS/மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கும், பின்னர் எழுத்துப்பூர்வமாக உறுதிப்படுத்தும்.
கடன் வரம்பை அதிகரிக்க விரும்பும் கார்டு உறுப்பினர், கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு கடிதம் எழுதி, கார்டு உறுப்பினர்/உறுப்பினரின் வருமானத்தை அறிவிக்கும் நிதி ஆவணங்களை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்யலாம். கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் அதன் சொந்த விருப்பப்படி மற்றும் வழங்கப்பட்ட அத்தகைய புதிய ஆவணங்களின் அடிப்படையில், கார்டு உறுப்பினரின் கடன் வரம்பை அதிகரிக்கலாம்.

C. பில்லிங்

1. பில்லிங் அறிக்கைகள் - கால இடைவெளி மற்றும் அனுப்பும் முறை:

கார்டைப் பயன்படுத்துவதால் ஏற்படும் அனைத்து கட்டணங்களுக்கும், கார்டு கணக்கிற்குப் பொருந்தும் அனைத்து கட்டணங்களுக்கும் அனைத்து கார்டு உறுப்பினர்களுக்கும் மாதாந்திர அடிப்படையில் கட்டணம் விதிக்கப்படும். இருப்பினும், கடந்த மாதத்தில் கணக்கில் எந்தவிதமான நிலுவைத் தொகையோ அல்லது பரிவர்த்தனையோ எதுவும் இல்லாத காலத்திற்கு எந்த அறிக்கையும் உருவாக்கப்படாமல் இருக்கலாம். எங்கள் பதிவுகளின்படி, பில்லிங் அறிக்கை மாதாந்திர அடிப்படையில் வாடிக்கையாளர்களின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும். ஒரு வாடிக்கையாளர் காகித அறிக்கையைக் கோரினால், காகித அறிக்கைக்கான கட்டண அட்டவணையின்படி கட்டணங்களை வசூலிப்பதன் மூலம், எங்கள் பதிவுகளின்படி வழங்கப்பட்ட அஞ்சல் முகவரிக்கு அஞ்சல் மூலம் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பப்படும்.
பில்லிங் தேதிகள் - பணம் செலுத்த வேண்டிய தேதிக்கு 15 நாட்களுக்கு முன்பு
பணம் செலுத்த வேண்டிய தேதிகள் – ரீடெயில் கிரெடிட் கார்டுகளுக்கு ஒவ்வொரு மாதமும் 5, 10, 15, 20 மற்றும் 25 ஆம் தேதிகளும், கார்ப்பரேட் கிரெடிட் கார்டுகளுக்கு ஒவ்வொரு மாதமும் 20 ஆம் தேதியும் ரீடெயில் கிரெடிட் கார்டு வைத்திருப்பவர்கள் தங்கள் வசதிக்கேற்ப, வாடிக்கையாளர் சேவை மையத்தையோ அல்லது அருகிலுள்ள KVB கிளைகளையோ தொடர்பு கொள்வதன் மூலம், தங்கள் வசதிக்கேற்ப ஒரு முறையாவது கிரெடிட் கார்டின் பில்லிங் சுழற்சியை மாற்றியமைக்கும் விருப்பத்தெரிவு வழங்கப்படும்.

2. செலுத்த வேண்டிய குறைந்தபட்ச தொகை:

கார்டு உறுப்பினர் ஏற்படும் அனைத்து கட்டணங்களையும் உடனடியாக செலுத்த வேண்டிய பொறுப்பிற்கு எந்தவித பாரபட்சமும் இல்லாமல், கார்டு உறுப்பினர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள Minimum Amount Due (செலுத்தவேண்டிய குறைந்தபட்ச தொகை) (MAD)ஐ மட்டும் உரிய தேதிக்குள் செலுத்தும் விருப்பத்தெரிவைப் பயன்படுத்தலாம். Minimum Amount Due (செலுத்தவேண்டிய குறைந்தபட்ச தொகை) ஆனது நிலுவைத் தொகையில் 5% ஆக இருக்கும் {குறைந்தபட்சம் ரூ.200/- + பொருந்தக்கூடிய அனைத்து வரிகளும் + EMI (EMI அடிப்படையிலான தயாரிப்பாக இருந்தால்) + OVL தொகை (ஏதேனும் இருந்தால்)} அல்லது கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் தனது சொந்த விருப்பப்படி தீர்மானிக்கக்கூடிய பிற தொகையாக இருக்கவேண்டும். தவணை முறையில் ஏதேனும் திருப்பிச் செலுத்தப்படும்பட்சத்தில், அறிக்கை காலத்தில் செலுத்த வேண்டிய தவணைத் தொகை Minimum Amount Due (செலுத்தவேண்டிய குறைந்தபட்ச தொகை) உடன் சேர்க்கப்படும். மொத்த நிலுவைத் தொகை கிரெடிட் அல்லது ரொக்க வரம்பை விட அதிகமாக இருந்தால், கிரெடிட் அல்லது ரொக்க வரம்பை மீறிய தொகையும் Minimum Amount Due (செலுத்தவேண்டிய குறைந்தபட்ச தொகை) உடன் சேர்க்கப்படும். Minimum Amount Due (செலுத்தவேண்டிய குறைந்தபட்ச தொகை), முந்தைய அறிக்கைகளின் செலுத்தப்படாமலிருக்கும் Minimum Amount Due (செலுத்தவேண்டிய குறைந்தபட்ச தொகை) ஏதேனும் இருந்தால், அதுவும் அடங்கும். Minimum Amount Due (செலுத்தவேண்டிய குறைந்தபட்ச தொகை) செலுத்தப்பட்டிருந்தாலும், செலுத்த வேண்டிய தேதிக்குள் மொத்த நிலுவைத் தொகையானது செலுத்தப்படாவிட்டால் அதற்கு வட்டி விதிக்கப்படும்.
வாடிக்கையாளர் கிரெடிட் கார்டு திருப்பிச் செலுத்துதலுக்கான ஆட்டோ டெபிட் வசதிக்கு பதிவுசெய்து, Minimum Amount Due (செலுத்தவேண்டிய குறைந்தபட்ச தொகை) விருப்பத்தெரிவைத்

தேர்ந்தெடுத்திருந்தால், அது நிலுவைத் தேதிக்கு முன்னர் வாடிக்கையாளரால் எந்தத் தொகையும் செலுத்தப்படாதபட்சத்தில், அதுவே நிலுவைத் தேதியில் செயல்படுத்தப்படும். ஒரு வாடிக்கையாளர் நிலுவைத் தேதிக்கு முன்னர் Minimum Amount Due (செலுத்தவேண்டிய குறைந்தபட்ச தொகையை) விடக் குறைவான தொகையைச் செலுத்தியிருந்தால், மீதமுள்ள வேறுபட்ட தொகை பற்று வைக்கப்படும். ஒரு வாடிக்கையாளர் நிலுவைத் தேதிக்கு முன்னர் Minimum Amount Due (செலுத்தவேண்டிய குறைந்தபட்ச தொகைக்குச்) சமமான அல்லது அதற்கு மேற்பட்ட தொகையைச் செலுத்தியிருந்தால், வாடிக்கையாளரின் பொறுப்புக் கணக்கிலிருந்து கூடுதல் தொகை எதுவும் பற்று வைக்கப்படாது. **ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்ச கட்டணத்தை மட்டும் செலுத்துவதனால், உங்கள் நிலுவைத் தொகையின் மீதான வட்டி செலுத்துதலுடன், திருப்பிச் செலுத்தல் என்பது பல வருடங்களுக்கு இழுக்கும்.**

EMI-ஆக மாற்றப்பட்ட பரிவர்த்தனைகள் / ரத்து செய்யப்பட்ட பரிவர்த்தனைகள் / ரிவர்சல்கள் / விளம்பர கேஷ் பேக் காரணமாக வணிகர் பணத்தைத் திரும்பப் பெறுதல்/ கேஷ் பேக் /கிரெடிட் செய்தல் ஆகியவை கார்டின் நிலுவைத் தொகைக்கான கட்டணமாகக் கருதப்படாது.

கார்டின் நிலுவைத் தொகையை ஒப்பிடுகையில் அதைவிட அதிகமாக கார்டு உறுப்பினர் பணம் செலுத்தினால், கார்டு கணக்கில் கிரெடிட் பேலன்ஸ் இருக்கும். இது கார்டில் அடுத்தடுத்த பரிவர்த்தனைகளுக்கு எதிராக சரிசெய்யப்படும். இருப்பினும், இந்த அதிகப்படியான கிரெடிட் தொகைக்கு வட்டி கோர முடியாது.

3. கட்டணம் செலுத்தும் முறை:

கார்ட்டில் நிலுவையில் உள்ள தொகைக்கு நீங்கள் செலுத்தும் தொகை, அனைத்து வரிகள், கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள், வட்டி கட்டணங்கள், EMIகள், ரொக்க முன்பணங்கள், கொள்முதல்கள் மற்றும் இருப்பு பரிமாற்றம் ஆகியவற்றிற்கு மேலே குறிப்பிட்ட வரிசையில் சரிசெய்யப்படும். நீங்கள் அனைத்து கொடுப்பனவுகளையும் இந்திய ரூபாயில் மட்டுமே செய்ய வேண்டும்.

அட்டைதாரர்கள் உரிய எச்சரிக்கையுடன், வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட முறைகள் தவிர வேறு முறைகள் மூலம் பணம் செலுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

கார்டு கணக்கிற்கான கட்டணங்கள் பின்வரும் வழிகளில் ஏதேனும் ஒன்றில் செலுத்தப்படலாம்:

- **ரொக்கம்:** கார்டு உறுப்பினர், கார்டு கட்டணத்திற்காக கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்டின் எந்த கிளையிலும் பணத்தை டெபாசிட் செய்யலாம். கிளைகளில் இதுபோன்ற பணம் செலுத்துவதற்கு ஒரு கட்டண பரிவர்த்தனைக்கு ₹100 கட்டணம் வசூலிக்கப்படும்.
- **காசோலை/வரைவு:** கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் நிறுவனத்தின் மொபைல் எண் மற்றும் கார்டு எண்ணின் கடைசி 4 இலக்கங்கள் 91-XXXXXXXXXX XXXX என்ற பெயரில் ஒரு காசோலை அல்லது வரைவோலையை தயார்செய்து, டிராப் பாக்ஸ்கள் உள்ள எந்தவொரு கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் கிளை / ATM இடங்களிலும் உள்ள சேகரிப்பு பெட்டியில் போடவும். ஒரு வாடிக்கையாளர் கிரெடிட் கார்டு நிலுவைத் தொகைக்கு காசோலை மூலம் செலுத்தியிருந்தால், காசோலை கிடைத்த பின்னரே காசோலைத் தொகைக்கு சமமான கடன் வரம்பு விடுவிக்கப்படும்
- **ஆட்டோ டெபிட்:** கர்டு உறுப்பினருக்கு கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்டில் சேமிப்புக் கணக்கு/ ஓவர் டிராஃப்ட் கணக்கு இருந்தால், ஒவ்வொரு மாதமும் பணம் செலுத்த வேண்டிய தேதியில் அந்தக் கணக்கிலிருந்து பணத்தை டெபிட் செய்ய எழுத்துப்பூர்வ அறிவுறுத்தலை வழங்குவதன் மூலம் அவர் சேமிப்புக் கணக்கு/ஓவர் டிராஃப்ட் கணக்கு மூலம் நேரடியாக பணம் செலுத்தலாம்
- **NEFT/RTGS:** NEFT/RTGS முறையைப் பயன்படுத்தி, உங்கள் வேறு எந்த வங்கி சேமிப்புக் கணக்குகளிலிருந்தும் உங்கள் கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் கிரெடிட் கார்டு நிலுவைத் தொகையைச் செலுத்துங்கள். IFSC - KVBL0001907
- **IMPS:** கிரெடிட் கார்டு பில் கட்டணத்தை செலுத்துவதற்கு 16-இலக்க மெய்நிகர் எண்ணைப் பயன்படுத்தவும். இந்த எண் "91 + கார்டுடன் இணைக்கப்பட்ட 10-இலக்க மொபைல் எண் + கிரெடிட் கார்டின் கடைசி 4 இலக்கங்கள்" ஆகியவற்றின் கலவையாக இருக்கும். கிரெடிட் கார்டு செலுத்துதல்களை ஏற்க “IFSC குறியீடு - KVBL0001907” என்பதைப் பயன்படுத்தவும்.
- **டிலைட் ஆப்:** கிரெடிட் கார்டுகள் -> பில் செலுத்துங்கள்-> கட்டணத் தொகையைத்

தேர்ந்தெடுக்கவும் -> கட்டண விருப்பத்தெரிவை தேர்ந்தெடுக்கவும் -> சமர்ப்பிக்கவும்

- **இணைய வங்கிச் சேவை:** கார்டு உறுப்பினர் கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்டில் சேமிப்புக் கணக்கை வைத்திருந்தால், அவர் கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்டின் வலைத்தளம் மூலம் ஆன்லைனில் பணம் செலுத்தலாம். www.kvb.co.in இல் உள்நுழையவும். பயனருக்கான க்ரெடென்ஷியல்களைப் பயன்படுத்தி உள்நுழையவும். கிரெடிட் கார்டுகள் -> பில் செலுத்துங்கள்-> கட்டணத் தொகையைத் தேர்ந்தெடுக்கவும் -> கட்டண விருப்பத்தெரிவை தேர்ந்தெடுக்கவும் -> சமர்ப்பிக்கவும்

4. பில்லிங் சர்ச்சைகளுக்கான தீர்வு:

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களுடன் கார்டு உறுப்பினர் உடன்படவில்லை என்றால், அறிக்கை பெறப்பட்ட 30 (முப்பது) நாட்களுக்குள் கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்டின் தகவல் தொடர்புகொள்ளும் முகவரிக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்க வேண்டும், இவ்வாறு தெரிவிக்காதபட்சத்தில், அறிக்கையில் காணப்படும் அனைத்து கட்டணங்களும் சரியானவை எனக் கருதப்படும்

5. வங்கியின் முழுமையான அஞ்சல் முகவரி:

கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட், மத்திய அலுவலகம், ஈரோடு சாலை, கரூர், தமிழ்நாடு - 639002.

6. வாடிக்கையாளர் பராமரிப்பு சேவைகளுக்கான கட்டணமில்லா எண், மின்னஞ்சல் ஐடி மற்றும் பிரத்யேக தொலைபேசி எண், குறை தீர்க்கும் அதிகாரியின் தொடர்பு விவரங்கள்

பின்வரும் வழிகளில் ஏதேனும் ஒன்றில் நீங்கள் வங்கியைத் தொடர்பு கொள்ளலாம்.

- கட்டணமில்லா எண் - 1800 419 6500
- உதவிஎண் (இந்தியாவுக்கு வெளியே): +91 044-69045000(உள்ளூர் அழைப்பு கட்டணங்கள் பொருந்தும்).
- மின்னஞ்சல் - creditcardsupport@kvbmail.com
- குறை தீர்க்கும் அதிகாரி – Head – Credit Card, The Karur Vysya Bank Ltd, Credit Card Cell, Consumer Banking Department, Ground Floor, Elnet Software city, Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600113

எங்களுடனான உங்கள் அனைத்துத் தகவல்தொடர்புகளிலும், உங்கள் வாடிக்கையாளர் ID அல்லது பதிவுசெய்யப்பட்ட மொபைல் எண் மற்றும் கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் கிரெடிட் கார்டு

D. செலுத்தத் தவறுதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சூழ்நிலைகள்:

1. அட்டைதாரரை கடனை செலுத்தத் தவறியவராகப் புகாரளிப்பதற்கான அறிவிப்பு காலம் உள்ளிட்ட செயல்முறை:

பில்லிங் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்குள் அட்டை உறுப்பினர் Minimum Amount Due (செலுத்தவேண்டிய குறைந்தபட்ச தொகையைச்) செலுத்தத் தவறினால், அது தவணை செலுத்தத் தவறியதாகக் கருதப்படும். தவணை செலுத்தத் தவறியிருந்தால், வங்கி தவணை செலுத்தத் தவறிய அறிக்கையை கடன் தகவல் பணியகங்கள் அல்லது சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிற நிறுவனங்களுக்கு அனுப்பலாம். பணம் செலுத்த வேண்டிய தேதிக்கும் பில்லிங் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பில்லிங் தேதிக்கும் இடையிலான காலம், கார்டு உறுப்பினரை, தவணை செலுத்தத் தவறியவராகப் புகாரளிப்பதற்கான அறிவிப்பு காலமாகக் கருதப்படுகிறது. கிரெடிட் கார்டு வசதிகளை நிர்வகிக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் துணை அட்டைதாரர்களுக்கும் பொருந்தும். 6 மாதங்களுக்கும் மேலான காலத்திற்கு நிலுவையில் உள்ள நிலுவைத் தொகை, கார்டுதாரரை 'வேண்டுமென்றே தவணை செலுத்தத் தவறியவராக' புகாரளிக்க வழிவகுக்கும்.

2. தவணை செலுத்தத் தவறுதல் அறிக்கையைத் திரும்பப் பெறுவதற்கான செயல்முறை மற்றும் நிலுவைத் தொகைகளைக் கட்டி முடித்த பிறகு தவணை செலுத்தத் தவறுதல் அறிக்கையை திரும்பப் பெறப்படவேண்டிய காலம்:

வங்கி, ஒவ்வொரு பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை, கி Credit information companies (ரெடிட் இன்ஃபர்மேஷன் கம்பனிக்கள்) (CICs) லிமிடெட்டிடம், CIC-க்கள் பரிந்துரைக்கும் வடிவத்தில் கார்டு உறுப்பினரின் தரவை சமர்ப்பிக்கும். இந்தத் தரவில் அனைத்து அட்டைதாரர்களின் திருப்பிச் செலுத்தும் நிலை, கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள் மற்றும் வழக்கமான கணக்குகள் மற்றும் முந்தைய மாதத்திற்கான கடன் கணக்குகளின் கார்டு நிலை ஆகியவற்றை உள்ளடக்கியது. ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின்படி, CIC-களும் வங்கிகளும் சேகரிக்கப்பட்ட/பராமரிக்கும் கடன் தகவல்களை இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை (அதாவது, அந்தந்த மாதத்தின் 15 மற்றும் கடைசி நாளில்) அல்லது வங்கிகளுக்கும் CIC-க்கும் இடையில் பரஸ்பரம் ஒப்புக் கொள்ளப்பட்ட குறுகிய இடைவெளிகளில் தொடர்ந்து புதுப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. தொடர்புடைய அறிக்கையிடல் பதினைந்து நாட்களுக்குப் பிறகு ஏழு (7) நாட்காட்டி நாட்களுக்குள் வங்கியால் CIC-களுக்கு இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை கடன் தகவல் சமர்ப்பிக்கப்படுவது உறுதி செய்யப்படும். CIC-க்கள், வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன் தகவல் தரவுகளை, அவற்றின் தரவு ஏற்பு விதிமுறைகளுக்கு ஏற்ப, வங்கியிடமிருந்து பெறப்பட்ட தேதியிலிருந்து ஐந்து 5 நாட்காட்டி நாட்களுக்குள் உள்வாங்க வேண்டும், இது ஜனவரி 1, 2025 முதல் அமலுக்கு வருகிறது.

கடனைத் திருப்பிச் செலுத்தாதவராகப் பதிவுசெய்யப்பட்ட நிலையில், வாடிக்கையாளர் தனது நிலுவைத் தொகையைச் செலுத்தினால், தீர்வு செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை CIC உடன் நிலையை வங்கி புதுப்பிக்கும்.

3. கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறும் பட்சத்தில் மீட்பு செயல்முறை:

கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறினால், தபால், தொலைநகல் மற்றும் தொலைபேசி, மின்னஞ்சல், SMS அனுப்புதல் மற்றும்/அல்லது மூன்றாம் தரப்பினரை ஈடுபடுத்துதல் மூலம் பின்தொடர்தல் நினைவூட்டல் மற்றும் நிலுவைத் தொகையை வசூலிப்பது ஆகியவை பின்தொடர்தல் நடவடிக்கைகளாக மேற்கொள்ளப்படலாம். வங்கி மற்றும் அவ்வாறு நியமிக்கப்பட்ட எந்தவொரு மூன்றாம் தரப்பினரும், அவ்வப்போது மாற்றியமைக்கப்படும் கிரெடிட் கார்டு செயல்பாடுகள் மற்றும் நிலுவைத் தொகையை வசூலித்தல் மற்றும் பிணையம் மீட்புக் கொள்கை ஆகியவற்றுக்கான வங்கியின் நியாயமான நடைமுறைக் குறியீட்டைப் பின்பற்ற வேண்டும்.

KVB-யில் நிலையான வைப்புத்தொகையின் சரியீட்டின் அடிப்படையில் வழங்கப்பட்ட கிரெடிட் கார்டில் நிலுவைத் தொகையானது பணம் செலுத்த வேண்டிய தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்தப்படாமல் இருந்தால், அந்த நிலையான வைப்புத்தொகையை ரத்து செய்து, கார்டின் நிலுவைத் தொகை, கட்டணங்கள் மற்றும் அதன் மீதான வட்டியை மீட்டெடுக்க KVBக்கு முழு உரிமை உள்ளது. ரீடெயில் அல்லது கார்ப்பரேட் கிரெடிட் கார்டின் நிலுவைத் தொகை, பணம் செலுத்த வேண்டிய தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்தப்படாமல் இருந்தால், OD/சேமிப்பு கணக்கில் இருந்து நேரடி டெபிட் செய்து, கார்டின் நிலுவைத் தொகை, கட்டணங்கள் மற்றும் அதன் மீதான வட்டியை மீட்டெடுக்க KVBக்கு முழு உரிமை உள்ளது.

சரியீடு மற்றும் பற்றுரிமை: ஏனைய எந்த ஒப்பந்தம் அல்லது சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பற்றுரிமைக்கான பொதுவான உரிமை அல்லது பிற உரிமைகளுடன் கூடுதலாக, இந்த ஒப்பந்தத்தின் கீழ் கிரெடிட் கார்டு வைத்திருப்பவரின் KVB-க்கான கடப்பாடுகளை தீர்க்கும் வகையில், முன்னறிவிப்பின்றி, கிரெடிட் கார்டு கணக்குகளில் உள்ள நிலுவைத் தொகையை, KVB உடன் கிரெடிட் கார்டு வைத்திருப்பவர் பராமரிக்கும் வேறு எந்தக் கணக்குடனும் பற்றுரிமையாக்கவோ அல்லது மாற்றவோ KVBக்கு முழு உரிமை உள்ளது.

கார்டு உறுப்பினர்/கார்ப்பரேட் நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட பிற கடன் வசதிகளுக்காக கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் வரம்பில் வசூலிக்கப்படும் பிணையங்கள், KVB ரிடெயில்/கார்ப்பரேட் கிரெடிட் கார்டின் கீழ் உள்ள அனைத்து நிலுவைத் தொகைகளையும் முழுமையாக செலுத்திய பின்னரே விடுவிக்கப்படும்.

4.அட்டைதாரரின் மரணம்/நிரந்தர இயலாமை ஏற்பட்டால் நிலுவைத்

தொகையை வசூலித்தல்:

கார்டு உறுப்பினரின் வாரிசுகள்/பரிந்துரைக்கப்பட்டவர்கள்/சட்டப்பூர்வ வாரிசுகள் ஆகியோருக்கு நிலுவைத் தொகையை செலுத்துவதற்கும், நிலுவைத் தொகை தொடர்பான அனைத்து தகவல்களுக்கும் போதுமான அறிவிப்பை வழங்கிய பிறகு, பொருந்தக்கூடிய சட்டங்களின்படி இது செய்யப்பட வேண்டும். எந்தவொரு பொருந்தக்கூடிய காப்பீட்டுத் திட்டத்திலிருந்தும் அல்லது அட்டைதாரரின் வாரிசுகள்/செயலாற்றுபவர்கள்/நிர்வாகிகளிடமிருந்தும் கார்டு நிலுவைத் தொகையை மீட்டெடுப்பது உட்பட, கார்டு கணக்கு(களின்) நிலுவைத் தொகையை வசூலிக்க, சட்டம் மற்றும் நீதியின் கீழ் கிடைக்கும் அனைத்து நடவடிக்கைகளையும், வங்கி தனது விருப்பத்திற்கு ஏற்ப மேற்கொள்ள உரிமை உண்டு.

5. அட்டைதாரருக்கு காப்பீட்டு கொள்கை, ஏதேனும் இருந்தால், நியமனதாரர் விவரங்கள் உட்பட பாலிசியின் செயல்படுத்தப்பட்ட தேதி:

காப்பீட்டு விவரங்களுக்கு, குறிப்பிட்ட கார்டில் இலவச காப்பீட்டுத் தொகை, பொருந்தினால், கார்டு செயல்படுத்தப்பட்ட நாளிலிருந்து செயல்படுத்தப்படும். காப்பீட்டு கோரிக்கைகளைத் தீர்க்கும் பொறுப்பு காப்பீட்டு நிறுவனத்திடம் மட்டுமே இருக்கும், மேலும் கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் எந்த வகையிலும் பொறுப்பேற்காது. காப்பீடு செய்யப்பட்டவர் காப்பீட்டு நிறுவனத்தால் வழங்கப்படும் காப்பீட்டுக் கொள்கையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருப்பார். காப்பீட்டு ஒப்பந்தமானது காப்பீட்டு நிறுவனத்திற்கும் காப்பீட்டாளருக்கும் இடையே மட்டுமே செயல்படும், கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் மற்றும் காப்பீடு செய்யப்பட்டவருக்கு இடையேயானதல்ல. கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்டின் பங்கேற்பு வாடிக்கையாளர் முற்றிலும் தன்னார்வ அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் வழங்கும் வங்கிச் சேவைகளின் விதிகளுக்கு இடையே நேரடி அல்லது மறைமுக தொடர்பு எதுவும் இல்லை.

E. கார்டு உறுப்பினர் சேர்க்கைய முடித்தல்/ரத்து செய்தல்/ஒப்படைத்தல்:

1. அட்டைதாரர் அட்டையை ஒப்படைத்தல்/மூடுதல் நடைமுறை:

கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் கிரெடிட் கார்டு(கள்) பயன்பாடானது, பரிமாற்றக் கட்டுப்பாட்டு விதிமுறைகள், நாட்டின் சட்டம் அல்லது அவ்வப்போது பொருந்தும் ஒழுங்குமுறை அதிகாரிகளின் விதிமுறைகளுக்கு இணங்க கண்டிப்பாக இருக்க வேண்டும் என்பதை நான்/நாங்கள் புரிந்துகொள்கிறோம். அந்நிய செலாவணி வர்த்தகம், லாட்டரி, பந்தயம், சூதாட்டம், டேட்டிங் உள்ளிட்ட பரிவர்த்தனைகளுக்கு இந்த அட்டை பயன்படுத்தப்படாது. இவற்றைப் பற்றி நான்/நாங்கள் புதுப்பித்துக்கொள்வது எனது/எங்கள் பொறுப்பு என்பதையும், அவ்வாறு செய்யத் தவறினால், அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டம் 1999 அல்லது அதன் சட்டப்பூர்வ மாற்றங்கள் அல்லது அதன் மறு-மேம்பாட்டிற்கு உட்பட்டு நடவடிக்கை எடுப்பதற்கு நான்/நாங்கள் பொறுப்பாவேன்/பொறுப்பாவோம் என்பதை உறுதிசெய்கிறேன்.

அட்டைதாரர் தனது கிரெடிட் கார்டு வசதியை எந்த நேரத்திலும் எழுத்துப்பூர்வ கோரிக்கை மூலமாகவோ அல்லது வங்கியின் வாடிக்கையாளர் தொடர்பு மையத்தை அழைப்பதன் மூலமாகவோ முடித்துக் கொள்ளலாம். தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்காக, ஹாலோகிராம், EMV CHIP மற்றும் மேக்னடிக் ஸ்ட்ரிப் ஆகியவை நிரந்தரமாக அழிக்கப்படுவதை உறுதிசெய்ய, அட்டையை குறுக்காக துண்டுகளாக வெட்ட அறிவுறுத்தப்படுகிறது. உங்கள் நிலுவைத் தொகைகள் அனைத்தும் உடனடியாக செலுத்த வேண்டிய தொகையாக மாறும். கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட், மேற்கூறிய கார்டு கணக்கைப் பொறுத்தவரை அனைத்து நிலுவைத் தொகைகளையும் செலுத்திய பின்னரே முடிவு அமலுக்கு வரும்.

2. மேற்கூறியவற்றுக்கு இணையதளத்தில் பிரத்தியேகமாக லிங்க் வழங்கப்பட்டுள்ளது:

இணையதளம்: https://www.kvb.co.in/customerservice/feedback-form/

3. அட்டைதாரர் தனது கார்டை ரத்து செய்ய தேவையான தொடர்பு விவரங்கள் – மின்னஞ்சல் Id, பிரத்யேக தொலைப்பேசி எண்.

மின்னஞ்சல் Id	**creditcardsupport@kvbmail.com**
கட்டணமில்லா எண்	1800 419 6500
தொலைப்பேசி எண்	044-69045000 (உள்ளூர் அழைப்ப கட்டணங்கள் பொருந்தும்)
கிளை வங்கிச் சேவை	அருகிலுள்ள KVB கிளைகள்/ முகப்புக் கிளைக்குச் செல்லவும்

4. கார்டு ஒரு வருடத்திற்கும் மேலாகப் பயன்படுத்தப்படாவிட்டால், கார்டு கணக்கை மூடுவதற்கான செயல்முறை

ஒரு கிரெடிட் கார்டு தொடர்ச்சியாக 1 (ஒரு) வருட காலத்திற்குப் பயன்படுத்தப்படாமல் இருந்தால், கார்டு பயன்படுத்தாதது குறித்து வங்கியானது அட்டைதாரருக்குத் தெரிவிக்கும், மேலும் அத்தகைய தகவல் வழங்கப்பட்ட நாளிலிருந்து 30 (முப்பது) நாட்களுக்குள் கார்டைப் பயன்படுத்தத் தொடங்குமாறு வங்கியானது அட்டைதாரரைக் கோரும் என்பதை நினைவில் கொள்ளவும். அட்டைதாரரிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை என்றால் அல்லது அட்டைதாரர் 30 (முப்பது) நாட்களுக்குள் அட்டையைப் பயன்படுத்தத் தொடங்கவில்லை என்றால், அட்டைதாரரால் அனைத்து நிலுவைத் தொகைகளும் செலுத்தப்பட்டிருந்தால், கார்டு கணக்கு வங்கியால் மூடப்படும்.

அட்டையைப் பயன்படுத்துவதில் வழக்கத்திற்கு மாறான மற்றும் அசாதாரணமான பரிவர்த்தனை முறைகளை வங்கி கவனித்தால், அட்டை பரிவர்த்தனையின் நம்பகத்தன்மையைச் சரிபார்க்க, அதன் பதிவுகளில் கிடைக்கும் வாடிக்கையாளரின் பதிவுசெய்யப்பட்ட தொலைபேசி எண்ணில் வாடிக்கையாளரைத் தொடர்பு கொள்ள வங்கி முயற்சிக்கும். வங்கியினால் வாடிக்கையாளரை தொடர்பு கொள்ள முடியாமல் போனால், அட்டைதாரரின் நலனுக்காகவும் பாதுகாப்பு காரணங்களுக்காகவும் அவசியம் என வங்கி நியாயமாக நம்பினால், எந்தவொரு மேலதிக அறிவிப்பும் இல்லாமல் கார்டின் பயன்பாட்டை கட்டுப்படுத்தவோ/முடித்துவிடவோ வங்கிக்கு உரிமை உண்டு.

கார்டு உறுப்பினர் செலுத்த வேண்டிய தொகையை செலுத்தத் தவறினாலோ அல்லது நீட்டிக்கப்பட்ட கடன் வரம்பை மீறினாலோ, கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் கிரெடிட் கார்டில் உள்ள வசதியை நிறுத்தி வைக்கலாம். ஒப்பந்தம் முடிந்த பிறகு அல்லது அட்டை கணக்கு இடைநிறுத்தப்பட்டிருந்தால் கிரெடிட் கார்டைப் பயன்படுத்தக்கூடாது. வங்கியின் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் பொருந்தக்கூடிய கொள்கைகளின்படி கிரெடிட் கார்டு பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்யும் நோக்கில், கீழ்கண்டவற்றைக் கண்டறிய கிரெடிட் கார்டு பயன்பாட்டில் அவ்வப்போது சோதனைகளை நடத்த வங்கிக்கு உரிமை உண்டு, ஒரு அறிக்கை சுழற்சியில் அனுமதிக்கப்பட்ட வரம்பைத் தாண்டி கடன் வரம்பை அதிகப்படியாகப் பயன்படுத்துதல், சில தேர்ந்தெடுக்கப்பட்ட வணிகர்களில் அசாதாரணமான அல்லது அதிகப்படியான பயன்பாடு, வணிகருடன் சாத்தியமான கூட்டுச் சேர்க்கை மற்றும்/அல்லது தனிப்பட்ட/வணிகம் தொடர்பான தேவைகளுக்காகப் பயன்படுத்துதல், தகுதியில்லாத வெகுமதி புள்ளிகள்/கேஷ்பேக்/பிற நன்மைகளை சேர்ப்பதற்காக அம்சங்கள்/ஆஃபர்கள்/திட்டங்களை அதிகப்படியாக/தவறாக பயன்படுத்துதல். பயன்பாட்டு முறைகளின் அடிப்படையில், இவற்றில் ஏதேனும் ஒன்றை வங்கி சந்தேகித்தால், கிரெடிட் கார்டின் மீது வங்கி கட்டுப்பாட்டு நடவடிக்கை எடுக்கலாம். அத்தகைய நடவடிக்கை உடனடியாக அமலுக்கு வரலாம், மேலும் அம்சங்கள்/பயன்பாடுகளை திரும்பப் பெறுதல் மற்றும் கிரெடிட் கார்டை முழுமையாக நிறுத்துதல் ஆகியவை இதில் அடங்கும். வங்கியால் இதுபோன்ற ஏதேனும் நடவடிக்கையும் எடுக்கப்பட்டால், கிரெடிட் கார்டு மற்றும் இணைக்கப்பட்ட அம்சங்கள்/சலுகைகளை மீண்டும் வழங்குவதற்கு வாடிக்கையாளர் நம்பகமான பயன்பாட்டிற்கான திருப்திகரமான ஆதாரத்தை வழங்க வேண்டிய பொறுப்பு வாடிக்கையாளரையே சார்ந்துள்ளது. இது தொடர்பான வங்கியின் முடிவு இறுதியானது மற்றும் வாடிக்கையாளர்களைக் கட்டுப்படுத்தும்.

வணிக அல்லது பாதுகாப்பு காரணங்களுக்காக, பணம் செலுத்துவதை தாமதப்படுத்துதல், கடன் வரம்பை மீறுதல் அல்லது காசோலைகள் திருப்பி அனுப்பப்படுதல் உள்ளிட்ட காரணங்களால், கரூர்

வைஸ்யா பேங்க் லிமிடெட் எந்த நேரத்திலும் முன் அறிவிப்பின்றி கார்டின் பயன்பாட்டை ரத்து செய்யலாம்.

கிரெடிட் கார்டு திட்டம் மூடப்படும்போது அல்லது கிரெடிட் கார்டு புதுப்பிக்கப்படும்போது, கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் அதன் சொந்த விருப்பப்படி, கார்டு உறுப்பினர் வைத்திருக்கும் தற்போதைய கார்டு வகையிலிருந்து வேறுபட்ட கார்டு வகையை வழங்கும் உரிமையை கொண்டுள்ளது. எந்த நேரத்திலும் எந்த கிரெடிட் கார்டிலும் உள்ள கடன் வரம்புகள் மற்றும் ரொக்க வரம்புகள், கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்டின் சொந்த விருப்பப்படி இருக்கும். கார்டு விண்ணப்பம் மூடல்/புதுப்பித்தல் நேரத்தில் வழங்கப்படும் எந்தவொரு மாற்று அட்டைக்கும் செல்லுபடியாகும்.

F. கார்டு தொலைந்து போவது/திருடு போவது/துஷ்பிரயோகம்:

1. கார்டு தொலைந்து போவது/திருடு போவது/துஷ்பிரயோகம் செய்யப்படும் பட்சத்தில் பின்பற்றவேண்டிய செயல்முறை – கார்டு வழங்குநருக்கு தெரிவிக்கும் முறை

கார்டு தொலைந்து போவது/திருடு போவது/துஷ்பிரயோகம் செய்யப்படும் பட்சத்தில், வாடிக்கையாளர் உடனடியாக கீழே உள்ள வழிகள் மூலம் கோரிக்கையை எழுப்பி அட்டையை ஹாட்லிஸ்ட் / பிளாக் செய்யலாம். எங்களுடனான உங்கள் தகவல் தொடர்பு அனைத்திலும், உங்கள் வாடிக்கையாளர் ID அல்லது பதிவுசெய்யப்பட்ட மொபைல் எண் மற்றும் கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் கிரெடிட் கார்டு எண்ணின் கடைசி 4 இலக்கங்களை தயவுசெய்து குறிப்பிடவும்

சேனல்	பணிப்பாய்வு/தொடர்பு விவரங்கள்
மொபைல் வங்கிச்சேவை	கிரெடிட் கார்டுகள் -> எனது கார்டுகள் > பிளாக் கார்டு/ஃப்ரீஸ் கார்டு
இணைய வங்கிச் சேவை	
ஹெல்ப்லைன் எண்	வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை பின்வரும் உதவி எண்களை அழைத்து கார்டை பிளாக் செய்யவும் **1800-419-6500 (கட்டணமில்லா எண்)** **044-69045000 (உள்ளூர் அழைப்பு கட்டணங்கள் பொருந்தும்)**
மின்னஞ்சல்	வங்கி வேலை நாட்களில் காலை 10:00 மணி முதல் மாலை 7:00 மணி வரை creditcardsupport@kvbmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.
கிளை வங்கிச் சேவை	அருகிலுள்ள ஏதேனும் KVB கிளைகளுக்குச் செல்லுவது

2. அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகளைப் புகாரளிப்பதற்கும் கார்டை பிளாக் செய்வதற்கும் வலைத்தள லிங்க், தொலைபேசி வங்கிச் சேவை, SMS, மின்னஞ்சல், IVR, பிரத்யேக கட்டணமில்லா உதவி எண், அருகிலுள்ள கிளையில் புகாரளித்தல் போன்றவை.

வாடிக்கையாளர் ஏதேனும் அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனை ஏற்பட்டதாகச் சந்தேகித்தால், மேலும் அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனை அல்லது தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தவிர்க்க, பிரிவு F (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகள் மூலம் வாடிக்கையாளர் வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும்.

முதன்மை அல்லது எந்தவொரு கூடுதல் கிரெடிட் கார்டு தவறவிட்டுவிட்டாலோ, தொலைந்தாலோ, திருடப்பட்டாலோ, சிதைக்கப்பட்டாலோ, உரிய நேரத்தில் கிடைக்கப் பெறவில்லை என்றாலோ அல்லது கார்டு உறுப்பினரின் அனுமதியின்றி கிரெடிட் கார்டு பயன்படுத்தப்படுவதாக சந்தேகித்தாலோ கார்டு உறுப்பினர் உடனடியாக அழைப்பு மையத்திற்குத் (கால் செண்டர்) தெரிவிக்க வேண்டும். இருப்பினும், அட்டைதாரரின் அனுமதியுடனோ/இல்லாமலோ, அல்லது கூடுதல் கார்டு உறுப்பினரின் அனுமதியுடனோ கார்டை அல்லது PIN-ஐ தவறாகப் பயன்படுத்தினால் அல்லது அட்டைதாரர் மோசடியாகச் செயல்பட்டிருந்தால் அல்லது நியாயமான கவனக்குறைவாகச் செயல்பட்டிருந்தால், அனைத்து இழப்புகளுக்கும் அட்டைதாரரே பொறுப்பாவார்.

கார்டானது தொலைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்ட பிறகு, அட்டை உறுப்பினர் பின்னர் அதைக் கண்டுபிடித்தால், எந்த சூழ்நிலையிலும் அதைப் பயன்படுத்தக்கூடாது, அதன் பின்னர் வங்கி அட்டையை இடைநிறுத்தும்.

வங்கி கேட்கும் போதெல்லாம் கார்டு உறுப்பினர் அதன் நகலை வழங்குவதற்காக, கார்டு உறுப்பினர் உள்ளூர் காவல் நிலையத்தில் ஒரு FIR பதிவு செய்ய அறிவுறுத்தப்படுகிறார். கார்டு உறுப்பினர் திருட்டு உட்பட கார்டின் பாதுகாப்புக்கும், கார்டைப் பயன்படுத்தி செய்யப்படும் பரிவர்த்தனைகளுக்கும் முதன்மையாகப் பொறுப்புள்ளவராவார். கார்டு உறுப்பினர், கார்டு தொலைந்து போவது /திருட்டு/ சேதம் குறித்து புகாரளித்த பிறகு, அந்த கார்டில் செய்யப்படும் எந்தவொரு பரிவர்த்தனைக்கும்/ செயல்பாடுகளுக்கும் கார்டு உறுப்பினர் பொறுப்பேற்க மாட்டார். இருப்பினும், அவ்வாறு தொலைந்து போவது/திருட்டு/சேதத்தைப் புகாரளிக்கும் நேரம் மற்றும்/அல்லது தொலைந்து போவது/திருட்டு/ சேதம்/தவறான பயன்பாடு குறித்து புகாரளித்த பிறகு கார்டில் செய்யப்பட்ட பரிவர்த்தனைகள் தொடர்பான ஏதேனும் சர்ச்சை ஏற்பட்டால், சர்ச்சைக்குரிய பரிவர்த்தனைகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

கார்டு உறுப்பினரின் நலனைப் பாதுகாப்பதற்காகவும், கார்டு கணக்கில் எந்த வகையிலும் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும், சமரசம் ஏற்படும் அபாயம் இருப்பதாக சந்தேகிக்கப்படும் பட்சத்தில், கிரெடிட் கார்டைத் தடுக்கும் உரிமையை கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் கொண்டுள்ளது. கார்டு உறுப்பினர் பிளாக் செய்யப்பட்ட கார்டை எந்தவொரு பரிவர்த்தனைக்கும்/ செயல்பாடுகளுக்கும் பயன்படுத்த முடியாது, மேலும் 10 (பத்து) வேலை நாட்களுக்குள் மாற்று கார்டைப் பெறுவார். மோசடி ஆபத்து குறித்து கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் மூலம் கார்டு உறுப்பினருக்குத் தெரிவிக்கப்பட்ட பிறகும், கார்டு உறுப்பினர் கார்டை அன்பிளாக் செய்யக் கோரினால், கார்டை மோசடியாகப் பயன்படுத்தியதற்காகவோ அல்லது வேறுவிதமாகவோ அதன் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவொரு மோசடி பரிவர்த்தனைகளுக்கும் கரூர் வைஸ்யா வங்கி லிமிடெட் எந்த வகையிலும் பொறுப்பேற்காது.

வணிகரால் ஏதேனும் தொகை வசூலிக்கப்படும்பட்சத்தில், அது வாடிக்கையாளரால் செலுத்தப்பட வேண்டிய தொகையாகும், அது சர்ச்சைக்குரியதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், வாடிக்கையாளருக்குப் பொருந்தக்கூடிய பில்லிங் சுழற்சியின்படி வாடிக்கையாளர் வங்கியில் பணம் செலுத்துவதற்குப் பொறுப்பாவார். கூடுதலாக, வங்கி பணம் செலுத்திய இடத்தில், அந்தத் தொகையை வாடிக்கையாளரிடமிருந்து மீட்டெடுக்க வங்கிக்கு உரிமை உண்டு. மேலும், தொகை சர்ச்சைக்குரியதாக இருந்தால், வாடிக்கையாளர் பில்லிங் சுழற்சியின்படி அதைச் செலுத்த வேண்டும், மேலும் சர்ச்சையின் விளைவு/முடிவுக்காகக் காத்திருக்கக் கூடாது. வாடிக்கையாளரின் வங்கியுடனான உறவு நிறுத்தப்பட்டிருந்தாலும் மற்றும்/அல்லது எந்த காரணத்திற்காகவும் கார்டு இடைநிறுத்தப்பட்ட/மூடப்பட்டிருந்தாலும், வங்கியின் பணத்தை திரும்பப் பெறும் உரிமையும், வாடிக்கையாளரின் கடனை செலுத்தும் பொறுப்பும் செல்லுபடியாகும் மற்றும் தொடர்ந்து நிலைத்திருக்கும்.

கார்டு தொலைந்தால் எந்தப் பொறுப்பும் இல்லை: அட்டைதாரர், கார்டு தொலைந்து போனதை கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு புகாரளிக்கும் தருணத்திலிருந்து, புகாரளிக்கும் காலத்திற்கு 03 நாட்களுக்கு முன்னர் மோசடியான கொள்முதல் பரிவர்த்தனைகளுக்கு எதிரான பாதுகாப்பு கிடைக்கிறது. இந்தக் காப்பீடு மோசடியான கட்டண பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும் மற்றும் கட்டாயமாக FIR உடன் வழங்கப்படவேண்டும். இந்த காப்பீட்டுத் திட்டம் ATM மற்றும் PIN அடிப்படையிலான பரிவர்த்தனைகளுக்கு செல்லுபடியாகாது.

3. ஜூலை 6, 2017 தேதியிட்ட 'வாடிக்கையாளர் பாதுகாப்பு - அங்கீகரிக்கப்படாத மின்னணு வங்கி பரிவர்த்தனைகளில் வாடிக்கையாளர்களின் பொறுப்பைக் கட்டுப்படுத்துதல்' குறித்து அவ்வப்போது புதுப்பிக்கப்படும் RBI சுற்றறிக்கை குறிப்பு DBR.No.Leg.BC.78/09.07.005/2017-18 இன் படி, மேலே உள்ள (i) வழக்கில் அட்டைதாரரின் கடப்பாடு.

அட்டை தொலைந்து போவது/திருட்டு/தவறாகப் பயன்படுத்தப்படுவது ஆகிய சூழல்களில், வங்கியின் இணையதளத்தில் புதுப்பிக்கப்பட்ட 'வாடிக்கையாளர் பாதுகாப்புக் கொள்கையால்' வங்கி வழிநடத்தப்படும். இது வாடிக்கையாளர் பாதுகாப்பு - அங்கீகரிக்கப்படாத மின்னணு வங்கி பரிவர்த்தனைகளில் வாடிக்கையாளர்களின் பொறுப்பைக் கட்டுப்படுத்துதல்' குறித்து அவ்வப்போது

RBI சுற்றறிக்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. (ஜூலை 6, 2017 தேதியிட்ட RBI சுற்றறிக்கை- குறிப்பு DBR. No. Leg.BC.78/ 09.07.2005/2017-18)

பின்வரும் இணையதளத்தைப் பார்வையிடுவதன் மூலம் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கொள்கைக் குறிப்பைப் பார்க்கலாம் என்பதை தயவுசெய்து நினைவில் கொள்ளவும். https://www.kvb.co.in/regulatory-disclosures/fair-practices-banking-codes-overview/banking-codes-policies/compensation-policy

G. குறை தீர்க்கும் மற்றும் இழப்பீட்டு கட்டமைப்பு:

1. குறை தீர்ப்பது மற்றும் மேல்நிலை செயல்முறை

எங்கள் சேவைகளில் நீங்கள் திருப்தி அடையவில்லை என்றால், உங்கள் குறைகளை பதிவு பின்வருவனவற்றின் மூலம் செய்யலாம்

(i) www.kvb.co.in இல் உள்ள “கருத்து/புகார் படிவம்” ஐப் பார்வையிடவும்

(ii) எங்கள் வாடிக்கையாளர் பராமரிப்பு எண் 1800 419 6500 ஐ அழைக்கவும்

(iii) creditcardsupport@kvbmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும் அல்லது

(iv) தலைவர் - கிரெடிட் கார்டு, தி கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட், கிரெடிட் கார்டு செல், நுகர்வோர் வங்கித் துறை, தரை தளம், எல்நெட் மென்பொருள் நகரம், ராஜீவ் காந்தி சாலை, தரமணி, சென்னை - 600113 என்ற முகவரிக்கு எழுதவும்.

(v) புகார்களை வாடிக்கையாளர் பராமரிப்பு செல், பொது மேலாளர், செயல்பாட்டுத் துறை, தி கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட், மத்திய அலுவலகம், ஈரோடு சாலை, கரூர், தமிழ்நாடு - 639002 என்ற முகவரியில் மேல்நிலைக்கு அனுப்புதல்.

எங்களுடனான உங்கள் தகவல் தொடர்பு அனைத்திலும், உங்கள் வாடிக்கையாளர் ID அல்லது பதிவுசெய்யப்பட்ட மொபைல் எண் மற்றும் கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட் கிரெடிட் கார்டு எண்ணின் கடைசி 4 இலக்கங்களை தயவுசெய்து குறிப்பிடவும்

குறை தீர்க்கும் கொள்கையின் வழிமுறை மற்றும் காலக்கெடு பின்வரும் வலைத்தளத்தில் கிடைக்கிறது என்பதை தயவுசெய்து நினைவில் கொள்ளவும் - https://www.kvb.co.in/regulatory-disclosures/fair-practices-banking-codes-overview/banking-codes-policies/Grievance-redressal-policy

2. குறைகளைத் தீர்ப்பதற்கான காலக்கெடு

உங்கள் புகார் வங்கியில் பெறப்பட்ட 30 நாட்களுக்குள் தீர்க்கப்படாவிட்டால், அந்தப் புகாரை மேல்நிலையாக இந்திய ரிசர்வ் வங்கியால் நியமிக்கப்பட்ட வங்கி குறைதீர்ப்பாளரிடம் தெரிவிக்கலாம். உங்கள் இருப்பிடத்திற்கான வங்கி குறைதீர்ப்பாளரின் விவரங்கள் கிளைகளில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

3. தோல்வியடைந்த பரிவர்த்தனைகள், புகார் தீர்வு தாமதம், கணக்கு மூடுதல்/ தொலைந்த அல்லது திருடு போன கார்டுகளை பிளாக் செய்வதில் ஏற்படும் தாமதம் போன்றவற்றிற்கான இழப்பீட்டு கட்டமைப்பு

பரிவர்த்தனை தோல்வியடையும் பட்சத்தில், TAT-இன் இணைக்கத்தின்படி, வங்கியானது 5 நாட்களுக்குள் பிளாக் செய்யப்பட்ட தொகையை திருப்பித் தரும். வணிகர் அத்தகைய பரிவர்த்தனையை உரிமை கோரினால், இழப்பீட்டுக் கொள்கையில் உள்ளடக்கப்பட்ட உரிமையாளர் (ஃப்ரான்சைஸ்) வழிகாட்டுதல்களின்படி வழக்கமான பிரச்சனை தீர்க்கும் செயல்முறை பின்பற்றப்படும்.

வங்கி வலைத்தளத்தில் காட்சிப்படுத்தப்படும் இழப்பீட்டுக் கொள்கையில் காலவரிசை குறிப்பிடப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. - https://www.kvb.co.in/regulatory-disclosures/fair-practices-banking-codes-overview/banking-codes-policies/compensation-policy

வணிக நிறுவனத்திற்கு குறிப்பிட்ட குறிப்பு தேவைப்படுகின்ற, வாடிக்கையாளர்களால் தவறுதலாகப்

புகாரளிக்கப்பட்ட பரிவர்த்தனைகள், கார்டு நெட்வொர்க்குகள் (VISA / MasterCard / RuPay) வகுத்துள்ள கட்டணம் திரும்பப் பெறும் விதிகளின்படி கையாளப்படும். அதிகபட்சமாக அறுபது நாட்களுக்குள் வாடிக்கையாளருக்கு விளக்கத்தையும், தேவைப்பட்டால், ஆவண ஆதாரங்களையும் வங்கி வழங்கும்.

கிரெடிட் கார்டை மூடும் செயல்முறையை ஏழு நாட்காட்டி நாட்களுக்குள் கார்டு வழங்குநர்கள் முடிக்கத் தவறினால், கிரெடிட் கார்டு மூடப்படும் வரை, கிரெடிட் கார்டு கணக்கில் நிலுவைத் தொகை எதுவும் இல்லாதபட்சத்தில், தாமதத்திற்கு வாடிக்கையாளருக்கு ஒரு நாளைக்கு ரூ 500 அபராதம் விதிக்கப்படும்.

4. கார்டு வழங்குநரின் தொடர்பு விவரங்கள் - அழைப்பு மையங்கள், மின்னஞ்சல் ஐடிகள், உதவி எண், பிற முக்கியமான தொலைபேசி எண்கள்.

மின்னஞ்சல் Id	**creditcardsupport@kvbmail.com**
கட்டணமில்லா எண்	1800 419 6500
தொலைப்பேசி எண்	044-69045000 (உள்ளூர் அழைப்ப கட்டணங்கள் பொருந்தும்)
கிளை வங்கிச் சேவை	அருகிலுள்ள KVB கிளைகள்/ முகப்புக் கிளைக்குச் செல்லவும்

H. வெளிப்படுத்தல்

தற்போதுள்ள வணிக நடைமுறைகளின்படி, வாடிக்கையாளருக்கு எந்த அறிவிப்பும் இல்லாமல், கிரெடிட் கார்டு(கள்) தொடர்பான எந்தவொரு தகவலையும் வங்கி அவ்வப்போது எந்தவொரு கிரெடிட் பீரோவிற்கும் (தற்போதுள்ள அல்லது எதிர்காலத்தில் உருவாக்கப்படும்) வெளியிட முடியும் என்பதை கார்டு உறுப்பினர் ஒப்புக்கொள்கிறார். Credit Information companies (கிரெடிட் இன்ஃபர்மேஷன் கம்பனிக்கள்) (CICs) என்பது நிதி அமைப்பின் செயல்பாடு மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்காக இந்திய அரசு மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒரு முன்முயற்சியாகும். இந்த முயற்சியில் பங்கேற்கும் அனைத்து வங்கிகளும் நிதி நிறுவனங்களும் வாடிக்கையாளர் தரவை CIC-களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும், மேலும் இந்தத் தகவல் Credit Information companies (கிரெடிட் இன்ஃபர்மேஷன் கம்பனிக்கள்) ஒழுங்குமுறைச் சட்டம் ஒழுங்குமுறைச் சட்டம், 2005 இன் விதிமுறைகளின் கீழ் வழங்கப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு, வாடிக்கையாளர் தனது கிரெடிட் கார்டு(கள்) கடன் தவணைச் செலுத்தத் தவறியது தொடர்பான எந்தவொரு தகவலையும், முன்னறிவிப்புடன் CIC-களுக்கும் (தற்போதுள்ள மற்றும் எதிர்காலத்தில் உருவாக்கப்படும்) வேறு எந்த கடன் பணியகத்திற்கும் உரிய அறிவிப்புடன் வங்கி வெளியிடலாம் என்பதை கார்டு உறுப்பினருக்குத் தெரிவிக்க விரும்புகிறோம். நிலுவைத் தொகையுள்ள கார்டு கணக்குகளுக்கான கட்டணம் செலுத்தப்பட்ட ரசீதின் தரவானது புதுப்பிக்கப்பட்டு, வங்கியால் பணம் பெறப்பட்ட நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் CICகள் / பிற கடன் பணியகங்களில் பிரதிபலிக்கும். குறைகள் தொடர்பான உரையாடல் அல்லது பணம் வசூல் தொடர்பான உரையாடல்கள் அல்லது வங்கி பொருத்தமாகக் கருதும் வேறு ஏதேனும் உரையாடல்கள் போன்ற சந்தர்ப்பங்களில், கார்டு உறுப்பினருக்கும் வங்கியின் பிரதிநிதிக்கும் இடையிலான குறிப்பிட்ட உரையாடல்களை வங்கி தனது சொந்த விருப்பப்படி பதிவு செய்யும் என்பதையும் கார்டு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட், அதனுடன் வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மற்றும் ஆவணங்களை, புகைப்படங்கள் உட்பட, தக்கவைத்துக்கொள்ளும் உரிமையை கொண்டுள்ளது, மேலும் அவற்றை திருப்பித் தராது.

1800 419 6500
www.kvb.co.in

THE KARUR VYSYA BANK LIMITED
Registered & Central Office:
No. 20, Erode Road, Vadivel Nagar,
L.N.S., Karur - 639 002